# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 83 — 1973 ඔක්තෝබර් 26 වැනි සිකුරාදා — 1973.10.26

83 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1141 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேவிப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 1147 | ஏலவிற்பனைகள் | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

மன்னார், ஆனையிறவு, சிலாவத்துறை, யாழ்ப்பாணம், செம்பன் குண்டு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப் படைக்கு 1974, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் 1974, திசெம்பர் 31 ஆந் திகதிவரையுள்ள காலவெல்லைக்கு படைவீடு, வைத்திய சாலைத் துணிமணிகளையும், பிற பதவிவரிசையினரின் உடுப்புகளை யும் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு, பாலத்க்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலை நிலையத்தில் கேள்விச் சபைத் தலைவரால் 1973, நவெம்பர் 26 ஆந் திகதி மு.ப. 10.0 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கு திருப்பிக்கொடு படற்பாலதான கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) இலங்கைத் தரைப் படைத் தலைநிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப் படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973, நவெம்பர் 20 ஆந் திகதி நண்பகல் 12.0 மணி வரை இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத் தால் வழங்கப்படும்.

மேலும் விவரங்களை கொழும்பு 3, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. எஸ். ஆட்டிகல,<br>
மேஜர் ஜெனரல்,<br>
இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,<br>
பாலதக்ஸ மாவத்தை,<br>
அ. அ. பெட்டி எண் 553,<br>
கொழும்பு 3,<br>
1973, ஒக்ரோபர் 15 ஆந் திகதி.

10-824/1—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

கொழும்பு, தியத்தலாவை, அம்பாறை, உடவளவை, கேகாலை, அனுராதபுரம், நுவரேலியா, வெள்ளவாயா ஆகிய இடங்களி லுள்ள இலங்கைத் தரைப்படைக்கு 1974, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் 1974, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள கால வெல்லைக்கு படைவீடு, வைத்தியசாலைத் துணிமணிகளையும், பிற பதவிவரிசையினரின் உடுப்புகளையும் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தில் கேள்விச் சபைத் தலை வரால் 1973, நவெம்பர், 27 ஆந் திகதி மு.ப. 10.0 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கு திருப்பிக் கொடு படற்பாலதான கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) இலங்கைத் தரைப் படைத் தலைநிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக் கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973, நவெம்பர் 20 ஆந் திகதி நண்பகல் 12.0 மணிவரை இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத் தால் வழங்கப்படும்.

மேலும் விவரங்களை கொழும்பு 3, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. எஸ். ஆட்டிகல,<br>
மேஜர் ஜெனரல்,<br>
இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,<br>
பாலதக்ஸ மாவத்தை,<br>
அ. அ. பெட்டி எண் 553,<br>
கொழும்பு 3,<br>
1973, ஒற்றோபர் 15 ஆந் திகதி.

10-824/2—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,<br>
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,<br>
கொழும்பு,<br>
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

பனாகொடை, திருக்கோணமலை, கந்தளாய், பதவிய, கண்டி, பூஸ்ஸ, மாத்தறை, மஹியன்கனை ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைக்கு 1974, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் 1974, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலவெல்லைக்கு படைவீடு, வைத்தியசாலைத் துணிமணிகளையும், பிற பதவிவரிசையினரின் உடுப்புகளையும் சலவை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தில் கேள்விச் சபைத் தலைவரால் 1973, நவெம்பர் 28 ஆந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கு திருப்பிக்கொடுபடாற்பாலதான கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) இலங்கைத் தரைப் படைத் தலை நிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973, நவெம்பர் 20 ஆந் திகதி நண்பகல் 12 மணிவரை இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தால் வழங்கப்படும்.

மேலும் விவரங்களை கொழும்பு 3, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. எஸ். ஆட்டிகல,
மேஜர் ஜெனரல்,
இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ஸ மாவத்தை,
அ. அ. பெட்டி எண் 553,
கொழும்பு 3,
1973, ஒற்றோபர் 15 ஆந் திகதி.

10-824/3—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

கொழும்பு, தியத்தலாவை, அம்பாறை, உடவளவை, கேகாலை, அனுராதபுரம், நுவரேலியா, வெள்ளவாயா ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைக்குப் படைவீடு, வைத்தியசாலைத் துணிமணிகளையும், பிற பதவிவரிசையினரின் உடுப்புகளையும் சலவை செய்வதற்கெனக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமையன்று இலங்கைக் குடியரசின் 79 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பெற்ற கேள்விப்பத்திர அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

2. மன்னார், ஆனையிறவு, சிலாவத்துறை, யாழ்ப்பாணம், செம்புன்குண்டு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப் படைக்குப் படைவீடு, வைத்தியசாலைத் துணிமணிகளையும், பிற பதவிவரிசையினரின் உடுப்புகளையும் சலவைசெய்வதற்கெனக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமையன்று இலங்கைக் குடியரசின் 79 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பெற்ற கேள்விப்பத்திர அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

டி. எஸ். ஆட்டிகல,
மேஜர் ஜெனரல்,
இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ஸ மாவத்தை,
அ. அ. பெட்டி எண் 553,
கொழும்பு 3,
1973, ஒற்றோபர் 15 ஆந் திகதி.

10-824/4—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

குறிப்பு இல. எல். டி./01-11.

### காணிக் கொமிஷனர் இலாகா

இரத்தினபுரி மாவட்டத்தில் கீழ் குறிப்பிடும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிவரை கொழும்பு, தபாற் பெட்டி இல. 500, காணிக் கொமிஷனர் இலாகா கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | வேண்டிய பதிவுத் தொகை ரூபா |
|---|---|
| 1. மளங்கம—யாயதெனிய பாதைக்குப் போகும் பாதைக்கு பாலம் கட்டுதல் | 25,000. |
| 2. எக்நெலிகொட—சுடகல பாதை அமைத்தல் 1 ம் மைல், 1 ம் பாதி | 20,000. |
| 3. கெடங்கம திக்ஹேன பாதை அமைத்தல் | 25,000/. |

2. கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள், 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை மேல் கூறப்பட்ட தொகைகளுக்கு அரசாங்க இலாகாக்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

3. கேள்விக்காரர்கள் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 100 வைப்புப் பணமாக இரத்தினபுரிக் கச்சேரியில் அல்லது வேறு கச்சேரியில் அல்லது கொழும்பு பொதுத் திறைசேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டிய பின்னரே கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

4. மேற்கூறிய தொகைகளுக்கு நீர்ப்பாசன, பகிரங்க வேலை, கல்வி இலாகாக்களில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள், பலநோக்குக் சமாஜங்கள் உட்பட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. பதிவு செய்யப்பட்டதற்கான பதிவை சமர்ப்பித்த பின்னரே கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் உறையில் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரும், கேள்விக்காரரின் பெயர், விலாசம் ஆகியவைகளும் குறிப்பிட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரம் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அதைக் கேள்விக்காரர் தாமாகவே கொழும்பு, காலி முகப்பு செக்கிரட்டேரியட் கட்டிடத்தில் 3 ம் மாடியின் 320 ம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மேற்கூறப்பட்ட 320 ம் இலக்க அறையில் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. கேள்விக்காரர்கள் இலங்கைத் தொழிலாளர்களை மட்டும் வேலைக்கமர்த்த வேண்டும்.

8. மேலதிக விபரங்களை இரத்தினபுரி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஸீ. மாணிகவாசகர்,
மேலதிக அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

இரத்தினபுரிக் கச்சேரி,
1973 ம் ஆண்டு ஒக்தோபர் மீ 15 ந் உ.

10-820—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

### காணி ஆணையாளர் திணைக்களம்

பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை த. பெ. எண். 500, கொழும்பு என்னும் முகவரியிலுள்ள காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த கேள்விப்பத்திர சபைத் தலைவர் அவர்கள், 1973 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 15 ம் திகதி பி. ப. 12.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

| வேலையின் விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகை |
|---|---|
| 1. ரொஜசன்கம—பரகஹமடித்த வெட்டக்கேப்பொத்த வீதியின் 1 ம் கட்டையில் அரைப்பாகம் அமைத்தல்—கொத்மலே பெரும் பாக உத்தியோகத்தர் பிரிவு. | 20,000 |

2. மேற் குறிப்பிட்ட தொகைக்கோ அல்லது அதிற் கூடிய தொகைக்கோ அரசினர் கட்டுவேலைப் பகுதி, நீர்ப்பாசன அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கட்கும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் இக்கேள்விக்கான வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 12 ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

3. வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் முன் நுவரெலியாக் கச்சேரியில் ரூபா 50 கேள்விக்கட்டணமாகக் கட்டிய பற்றுச் சீட்டு கேள்விக்காரர்களால் அரசாங்க அதிபருக்கும் காண்பிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியன இக் கேள்விக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. காசோலை, காசுக்கட்டளை, தபாற் கட்டளை முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டு உள்ள உறை முத்திரையிடப்பெற்று, உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அவற்றை நேரடியாகக் கொழும்பிலுள்ள செயலகத்தில் 320 ம் இலக்க அறையினுள் வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம்.

5. கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு நொவம்பர் 15 ம் திகதி பி. ப. 2.30 மணிக்குக் கொழும்பிலுள்ள செயலகத்தில் 320 ம் இலக்க அறையில் வைத்துத் திறக்கப்படும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் இலங்கையரை வேலைக்கமர்த்த இணங்க வேண்டும். மேலும் அவர்கள் வேலை நடைபெறும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாயுமிருக்க வேண்டும்.

7. மேற்கூறிய நிபந்தனைக்கமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் நடக்கத் தவறினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும். ஆனால் விசேடமான சூழ்நிலைகளில் இவ்விதியிலிருந்து, ஒப்பந்தம் எவ்வுத்தியோகத்தருடன் செய்யப்பட்டதோ அவ்வுத்தியோகத்தர் காணி, கமத்தொழில் அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் சம்மதத்துடன் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்துவதற்கு எழுத்து மூலம் அனுமதி அளிக்கலாம்.

மேற்கூறிய அனுமதி எழுத்து மூலம் பெறாமல் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்துதல் தவிர்க்கப்பட்டுள்ளது. அது ஒப்பந்தத்தை மீறியதாகும்.

8. இவ்வொப்பந்தத்திற்கு "இலங்கையர்" என்பது வம்சாவழி அல்லது பதிவுப் பிரசைகளைக் குறிக்கும்.

9. ஒப்பந்தகாரர் தற்போது அமுலிலிருக்கும் அல்லது எதிர்காலத்தில் அமுலுக்கு கொண்டுவரப்படும் தொழிலாளருக்கான சம்பள சட்டங்கட்கமையத் தன்னால் ஒவ்வொரு துறையிலும் வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளருக்கு நியாயமான சம்பளம் வழங்க வேண்டும்.

10. ஒப்பந்தக்காரர் காணி ஆணையாளர் திணைக்களத்தின் அனுமதி பெற்ற எவ்வுத்தியோகத்தரையும் இவ்வேலையோடு தொடர்புடைய புத்தகங்கள் கணக்கீடுகள், வேலையாட்கள் வரவு அட்டை முதலியவற்றைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

11. வேறேதும் விபரங்கள் தேவைப்படின் நுவரெலிய அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

12. தவறிழைக்கும் ஒப்பந்தக்காரர் பட்டியலில் காணப்படும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

வை. பி. புஸ்ஸதெனிய,
நுவரெலியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

நுவரெலியா கச்சேரி,
1973, ஒக்டோபர் 16.

10-907—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

### கல்வித்திணைக்களம்

**யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு பால் விஸ்கோத்துக்கள் கொண்டு செல்வதற்கான கேள்விப்பத்திரம் கோரல்—1974**

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவர், 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 1974 ம் ஆண்டு டிசம்பர் 31 ம் திகதி முடியவுள்ள காலத்திற்கு கீழ்க்காணும் சேவைகளுக்கு சீல் இடப்பட்ட கேள்விப்பத்திங்களை 1973 ம் ஆண்டு நவம்பர் 28 ம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார். கேள்விப்பத்திரங்கள், இணைப்பிரதிகளில் இருத்தல் வேண்டும். ஒவ்வொன்றும் 19×11×9 அங்குல அளவினதான கிட்டத்தட்ட 20 றாத்தல் பால் விசுக்கோத்துக்களை கொண்ட உறுதியான காட்போட் அட்டைப் பெட்டிகளை விநியோக நிலையங்களில் இருந்தி பாடசாலைகளுக்குக் கொண்டுசெல்லுதல்.

பின்வரும் சேவைகளுக்குத் தனித்தனி கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்:—

1. யாழ்ப்பாண விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டிய பின்வரும் கல்விவட்டாரப் பாடசாலைகள் :—

அ. கோப்பாய்
ஆ. கிளிநொச்சி
இ. சாவகச்சேரி
ஈ. காங்கேசன்துறை
உ. பருத்தித்துறை
ஊ. உடுப்பிட்டி
எ. உடுவில்
ஏ. ஊர்காவற்றுறை
ஐ. யாழ்ப்பாணம்
ஒ. நல்லூர்
ஓ. வட்டுக்கோட்டை

2. வவுனியா விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :—

அ. வவுனியா
ஆ. முல்லைத்தீவு

3. மன்னார் விநியோக நிலையத்திலிருந்து எடுத்துச்செல்லவேண்டிய பின்வரும் கல்வி வட்டாரப் பாடசாலைகள் :—

அ. மன்னாரும் முருங்கனும்

கேள்விப் பத்திரம் அதற்கென உரியதும் வடமாநில கல்வி அதிபதி அவர்களிடமிருந்து பெறக்கூடியதுமான படிவத்திலேயே கோரல் வேண்டும். யாழ்ப்பாணக் கல்வித்திணைக்கள கஸ்தூரியார் வீதியிலுள்ள நிதிக்கிளையிலோ அல்லது கச்சேரியிலோ ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியாக ரூபா 100/- கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை 1973 ம் ஆண்டு நவம்பர் 23 ம் திகதி மாலை 3.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திர கட்டுப்பண விதிவிலக்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்குண்டு.

3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரமும், திகதியும் ஒப்பந்தகாரருக்குப் பின் அறிவிக்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க ஒப்பந்தக்காரர்கள் அனுமதிக்கப்படுவர்.

4. வடமாநில கல்வி அதிபதி திருப்தி கொள்ளும் வகையில் குறைந்தது ரூபா 15,000 பெறுமதியான அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளர் என்று அந்த இட பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடமிருந்து/ சமீபத்தில் பெறப்பட்ட ஒரு கடிதமும், இரண்டு கல்வி வட்டாரங்களுக்குக் கோரின் தனது பெயரிற் பதியப்பட்டுள்ள மேல் மூடப்பட்ட எவ்விதத்திலேனும் பராதீனப்படுத்தப்படாத ஒரு லொறியும் இரண்டிற்கு மேற்பட்ட கல்வி வட்டாரங்களுக்கு மேற்பட விண்ணப்பிக்குமிடத்து ஆகக்குறைந்தது எவ்விதத்திலேனும் பராதீனப்படுத்தப்படாத இரண்டு லொறிகளும்

தமது சொந்தத்தில் உண்டென்றும் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். லொறிகள் மூலம் கொண்டு செல்லுதல் சாத்தியமற்றதென் வடமா நில கல்வி அதிபதி அவர்கள் கருதும் பாடசாலைகளுக்கு அவர் தமது தற்றுணிபின்படி டிறக்டர்களை உபயோகிக்க அனுமதிக்க லாம். ஆனல், அப்படியான டிறக்றர்கள் டிறக்றர் பெட்டிகளை உடையதாகவும் விசுக்கோத்துப் பெட்டிகளுக்கு மழையினலும் வேறு வழிகளினலும் ஏற்படக்கூடிய சேதத்தினதும் உறுத்தியான பாதுகாப்பு அளிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். டிறக்றர் வாகனங்களை உபயோகிக்க உத்தேசிக்கப்படுமிடத்து அவை உப யோகிக்கக்கூடியன என்பதை வடமாநில கல்வி அதிபதி அவர் களுக்கு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அத்துடன் விசுக்கோத் துக்களை டிறக்றர்களில் கொண்டுசெல்லும்பொழுது ஏற்படக்கூடிய எந்தச் சேதத்திற்கும் அரசாங்கம் பொறுப்புடையதாகாது. ஏற் படும் சேதங்களுக்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பாளியாவதோடு அன்னரே அதனல் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்தல் வேண்டும். ஒன்றிக்கு மேற்பட்ட மாநிலங்களில் இதேபோன்ற சேவையில் ஈடுபடும் ஒப்பந்தக்காரர்கள் இம்மாநில சேவைக்கு வேண்டும் வாக னங்களை தனித்துடையவராய் இருத்தல்வேண்டும். வேண்டப்படு மிடத்துக் கூடுதலான வாகனங்களை உபயோகிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

5. விநியோக நிலையத்திலிருந்து பாடசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்கு மாத்திரம் கேள்விகள் கோரல் வேண்டும். விநியோக நிலைய கூலியாட்களினல் விசுக்கோத்துப் பெட்டிகள் வாகனங் களுக்கு ஏற்றப்படும்.

6. கேள்விப் பத்திரங்களை முற்ருகவோ அல்லது அதன் ஒரு பகு தியையோ நிராகரிக்கும் அதிகாரத்தினை கேள்விச் சபைத் தலை வர் தன்னகத்தே கொண்டுள்ளார். கேள்விப் பத்திரதாரர்கள் தமது கேள்விகளை அவை முடிவடைந்த திகதியிலிருந்து 6 கிழமை களுக்கு செல்லும்படியாக வைத்திருத்தல் வேண்டும்.

7. எல்லாப் பாடசாலைகளுக்கும் ஒரு கிழமைக்குள் விநியோகம் செய்துமுடிக்க வேண்டுமென்பதை கேள்விதாரர்கள் கவனித்தல் வேண்டும்.

8. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுடைய சேவையை முன் அறிவித்தலுடன் எந்நேரமும் நிற்பாட்டும் உரிமை வடமாநிலக் கல்வி அதிபதிக்குண்டு.

9. இது சம்பந்தமான மேற்கொண்ட விபரங்களுக்கும், தகவல் களுக்கும் வடமாநில கல்வி அதிபதி யாழ்ப்பாணம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

தி. மாணிக்கவாசகர்,
வடமாநில கல்வி அதிபதி.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
12.10.1973.

10-805—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

---

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும்பால் விநியோகம்

**கேள்விகளுக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1974 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து/சுகாதார அலுவலகத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து அநுராதபுரம் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

(2) (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவல கங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு முன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்வி கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடைந்த திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியிற் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகுதிகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்ப வேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதாரசேவை அத்தியட்சகர், அநுராதபுரம் என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரை யிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனே அல்லது என் அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் விகிதங்களை அனுமதிக்கப்படாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் அனுராதபுரப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சருக்கு விண்ணப்பித்துக் பெற்றுக் கொள்ளலாம்.

மு. வேதாரணியம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
அனுராதபுரம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
அனுராதபுரம்,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 12 ந் வ.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

| சேவை | பிரிவு | மாதாந்த உத்தேசத் தொகை பயின்ற் | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|
| (1) அனுராதபுர புகையிரத நிலையத்திலிருந்து அனுராதபுரம் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் ஊடாக அவ்வதிகாரியின் பகுதியில் உள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு .. | அனுராதபுரம் .. | 6,000 | 23.11.73 காலை 10.00 மணி |
| (2) திருகோணமலை புகையிரத நிலையத்திலிருந்து திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் ஊடாக அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு | திருகோணமலை | 6,500 | |
| (3) கெகிராவை புகையிரத நிலையத்திலிருந்து கெக்கிராவை பொறுப்புள்ள அதிகாரியின் அலுவலகம் ஊடாக அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு .. | கெக்கிராவை .. | 3,550 | |

10–804/1—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

**சுகாதாரத் திணைக்களம்—அநுராதபுரப் பிரிவு**

அழுக்குத்துணி சலவை செய்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் முதலாம் பந்தியிலுள்ள தாபனங்களுக்கு அழுக்குத்துணி சலவை செய்வதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட வெவ்வேறு கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழிற் தாபனங்களிடமிருந்து அநுராதபுரம் சுகாதார சேவை அத்தியட்சர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக்கட்டுப் பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 2 வது பந்தியில் குறிக்கப்படும் வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பாக இவ் வலுவலகத்திலும் ; அல்லது

| | | | | |
|---|---|---|---|---|
| பதுளை | காலி | கேகாலை | மாத்தறை | வவுனியா |
| மட்டக்களப்பு | களுத்துறை | குருநாகல் | புத்தளம் | யாழ்ப்பாணம் |
| கொழும்பு | கண்டி | மாத்தளை | இரத்தினபுரி | |

ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகங்களிலும் கொடுக்கப்படும். குறித்த பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களைத் தபால் மூலம் பெறுதற்கு, தகுதியுள்ள கேள்விக்காரர்கள், கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு ஏற்றதாக நேரகாலத்தோடு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **சலவை செய்யவேண்டிய துண்டுகளின் விபரங்கள்.**—மாதாந்தம் சலவை செய்யவேண்டிய துண்டுகளின் உத்தேச தொகை விபரங்கள் கீழ்க்காணும் அட்டவணையின் 5 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. **கேள்விகள் அனுப்ப வேண்டிய முறை.**—எல்லாக் கேள்வியும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சர், அநுராதபுரம் என்று முகவரியிட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படல்வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக்கொண்ட உறையின் இடதுபக்கத்தின் மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்த அலுவலகத்திலிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ அல்லது செயலாளர்/கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 6 து பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதி மு.ப. 10.0 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியை நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணை வைப்புப்பணம்.**—கேள்விகள் ஒப்புக்கொள்ளப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் தரப்பட்டிருக்கும் பிணைவைப்புப் பணத்தை செலுத்திய பின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **வேறு விபரங்கள்.—(i) களஞ்சிய அறை, மின்சாரம், நீர், ஏனைய வசதிகள்.**—களஞ்சிய அறை, மின்சாரம், நீர், ஏனைய வசதிகள் பெறப்படின் அச்சலுகைகளுக்கான செலவை அவ்வூர் பெரும்பாக இறைவரி அதிகாரியினால் கணிக்கப்பட்ட விகிதப்படி மாதாந்தம் ஒப்பந்தக்காரரின் மாதாந்த உறுதிச்சீட்டிலிருந்து அறவிடப்படும்.

**(ii) அழுக்குத்துணிகளை கிருமிநாசினி செய்யவேண்டின் அதற்கான போக்குவரத்துக் கட்டணம்.**—அழுக்குத்துணிகளை சலவை செய்யுமுன் கிருமிநாசினி செய்யவேண்டி நேரிடின் தாபனங்களிலிருந்து கிருமிநாசினி நிலையத்திற்கு எடுத்துக்கொண்டு திரும்பக் கொண்டுவருவதற்கான போக்குவரத்துக் கட்டணம் கொடுப்படமாட்டா.

**(iii) உள்ளூராட்சி பகுதியிலுள்ள நிலையங்களுக்கான கேள்விப்பத்திரங்கள்.**—உள்ளூராட்சி நிலையங்களுக்கான கேள்விகளை அவ்வுள்ளூராட்சி விதிகளுக்கு—ஏதும் உண்டானால்—அமையச் சலவைச்சாலைகள் நடத்துபவர்களே விண்ணப்பிக்கலாம்.

(iv) கேள்விக்காரர்கள் விரும்பினால் ஒரு பகுதிக்கு அல்லது எல்லாப் பகுதிகளுக்கும் கேள்விப்பத்திரங்களைச் சமர்பிக்கலாம். ஆனால் குறிக்கப்பட்ட தொகையைக் கட்டுப்பணமாக கேள்விப்பத்திரம் அனுப்பும் ஒவ்வொரு பகுதிக்கும் செலுத்தவேண்டும்.

சுகாதார சேவை அத்தியட்சர் அலுவலகம்,
அநுராதபுரம்,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 12 ந உ.

மு. வேதாரணியம்,
சுகாதார சேவை அத்தியட்சர்,
அநுராதபுரம்.

குறித்த அட்டவணை

| (1) தாபனம் | (2) கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் ரூ. ச. | (3) பிணை வைப்புப் பணம் ரூ. ச. | (4) மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய தடவைகள் சராசரி தொகை | (5) மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய துணிகளின் உத்தேசத் தொகை | (6) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| அரசினர் வைத்தியசாலை—அநுராதபுரம் | | | | | |
| பிரிவு 1 : சத்திரசிகிச்சை மண்டபம் .. | 100 00 | 300 00 | 30 | 4,000 | 23.11.73 காலை 10 மணி |
| பிரிவு 2 : குழந்தைகள் சிகிச்சை, கர்ப்பச் சிகிச்சை, ஆண் பெண் சத்திரசிகிச்சைக் களங்கள் .. | 100 00 | 300 00 | 15 | 5,000 | |
| பிரிவு 3. பொது சிகிச்சைக் களங்கள் .. | 50 00 | 200 00 | 4 | 4,000 | |
| பிரிவு 4. கயரோக சிகிச்சைக்களங்கள் .. | 25 00 | 100 00 | 4 | 400 | |
| அரசினர் வைத்தியசாலை—திருகோணமலை | | | | | |
| பிரிவு 1. சத்திரசிகிச்சை மண்டபம் .. | 100 00 | 300 00 | 30 | 2,000 | |
| பிரிவு 2. குழந்தைகள் சிகிச்சை, கர்ப்பச் சிகிச்சை, ஆண் பெண் சத்திரசிகிச்சைக் களங்கள் .. | 100 00 | 300 00 | 15 | 3,000 | |
| பிரிவு 3. பொது சிகிச்சைக் களங்கள் .. | 50 00 | 200 00 | 4 | 900 | |
| பிரிவு 4. கயரோக சிகிச்சைக் களங்கள் .. | 25 00 | 100 00 | 4 | 300 | |

10–804/2—26.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 83

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

*மின்தறிப் பாகங்கள் வழங்குவதற்கான கேள்விகளை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 1973. 11. 21 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக்கொள்வார்.*

*2. முழு விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.*

*தொடர்பிலக்கம் 3—1 (3—15)*
*சிறு கைத்தொழிற்றிணைக்களம்,*
*ஹேமாஸ் கட்டிடம்,*
*கொழும்பு-1,*
*1973-10-16*

*சோமபால குணதீர,*
*சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.*

10—882—26.10.73 ம் திகதிய வர்த்தமானி ல. 83

---

### காணிப்பகுதி ஆணையாளர்

*மாத்தறை மாவட்டத்துக்குள் (1) கியாண்டுவ—இலுப்பல்லவீதி சக (2) மளிதுவ—கொஹுகொட வீதி, சம்பந்தமாக (டெண்டர்) கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தல்.*

மேற்படி வேலை சம்பந்தமாக ரூபா *(1) 50,000/- க்கு அல்லது*

*(2) 45,000/- க்கு அல்லது*

அதற்குக் கூடுதலான தொகைக்கு பகிரங்கவேலைப்பகுதி அல்லது நீர்ப்பாசனப்பகுதி அல்லது கல்விப்பகுதி வேலைகள் நிமித்தம் (அ) அரசாங்க கொந்துருத்துக்காரர் (ஆ) கூலியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கேள்விப்பத்திரங்கள் மேற்படி வேலைகள் சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இரண்டு பிரதிகள் ஒரு உறையில் ஸீல் வைக்கப்பட்டு தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரங்கள் "தலைவர், காணியாளர் இலாகா கேள்விப் பத்திரச்சபை, த. பெ. இலக்கம் 500, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் கொழும்பிலுள்ள காலி மைதானத்திலுள்ள செயலாளர் அலுவலகத்திலுள்ள 320 ஆம் இலக்க அறையில் இதற்கென் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில்—மேற்படி வேலை (1) சக (2) சம்பந்தமான கேள்விப்பத்திரம் என்று குறிப்பிடல் வேண்டும். 1973.11.02 ந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன் கேள்விப்பத்திரச் சபை தலைவருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

5. 1973.10.30 ந் திகதி நண்பகல் 12 மணி வரை மாத்தறைக் கச்சேரியிலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். நியமிக்கப்பட்ட பத்திரங்களில் விண்ணப்பிக்காவிட்டால் ஆலோசனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விக்காரர்கள் பிழை திருத்தங்கள் செய்திருந்தால் அழித்திருந்தால் ஒவ்வொரு திருத்தங்களும் கேள்விப் பத்திரகாரரால் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன் ரூபா 50/- வைப்புப்பணமாக மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் பேரில் கட்டப்பட்ட பற்றுச் சீட்டு சமர்ப்பிக்கும்போது தேவையான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இதுபற்றியவர்களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 10 நாட்களுக்குள், இதற்குரிய பிணைத்தொகையைக்கட்டி ஒப்பந்தத்தைச் செய்யமறுத்தால், அன்னரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

9. கேள்விப்பத்திரங்களை ஒப்புக் கொண்டபடிக்கு கேள்விக்காரர்களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினால், கேள்விக்காரர்களுக்கு கிடைத்திருக்குமென்று நம்பப்படும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதின் பிறகு மற்றும் வைப்புப் பணங்களைத் திருப்பிக்கொடுக்கப்படும்.

10. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர்கள் முழுத்தொகையில் 5% சத வீதத்தை, பிணைத்தொகையைக் கட்டி வேலை திருப்திகரமாக குறிப்பிட்ட காலத்தில் முடித்துக் கொடுப்பதற்கென, மாத்தறை அரசாங்க அதிபருடன் ஒப்பந்தஞ் செய்து கொள்ளவேண்டும். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வைப்புப் பணம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

11. ஏதேனும் ஒரு கேள்வியை (டெண்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ, அரசாங்கத்துக்கு பூரண அதிகாரமுண்டு.

12. அரசாங்க வேலை திருப்திகரமாகச் செய்யப்படாத ஒப்பந்தக்காரரின் பட்டியலில், கொந்துராத் கேள்வியாளரின் பெயர் இருந்தால், அன்னரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

| வேலையின் பெயர் | குறிப்பிட்டதொகை |
|---|---|
| (1) கியாண்டுவ — இலுப்பல்ல வீதி, | ரூபா 50,000/- க்கு அல்லது அதற்கு மேல் |
| (2) மளிதுவ — கொஹொகொட வீதி. | ரூபா 45,000/- க்கு அல்லது அதற்கு மேல் |

ஏ. டப். டி. பெரேரா,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1973.10.02.

10-787—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### அரசாங்க விநியோகத் திணைக்களம்

1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கொழும்பு-2 சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள அரசாங்க விநியோகத் திணைக்களத்தில் 15 மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். வாகனங்களை மேற் குறிப்பிட்ட நிலையத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை அரசாங்க விநியோக திணைக்கள பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. பீ. ரூபசிங்க,
அரசாங்க விநியோகத் திணைக்கள பணிப்பாளர்.

கொழும்பு-2.
ஒற்ருேபர், 1973.

10-974—26.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 83.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும்குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருககுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினுல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** .. | **5.10.73** | வெள்ளி .. | **25. 9.73** | செவ்வாய் .. | ந.ப. **12.00** |
| | **12.10.73** | வெள்ளி .. | **3.10.72** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **19.10.73** | வெள்ளி .. | **10.10.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **26.10.73** | வெள்ளி .. | **17.10.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| **நவெம்பர்** .. | **2.11 73** | வெள்ளி .. | **24.10.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **9.11.73** | வெள்ளி .. | **31.10.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **16.11.73** | வெள்ளி .. | **7.11.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **23.11.73** | வெள்ளி .. | **14.11.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **30.11.73** | வெள்ளி .. | **21.11.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| **திசெம்பர்** .. | **7.12.73** | வெள்ளி .. | **28.11.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **14.12.73** | வெள்ளி .. | **5.12.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **21.12.73** | வெள்ளி .. | **12.12.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **28.12.73** | வெள்ளி .. | **19.12.73** | புதன் .. | ந.ப. **12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.